திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்த்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலர் சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலும், அரசு போக்குவரத்துத் துறையிலும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த மாவட்டத்திற்குச் செல்ல மனு கொடுத்திருக்கிறார்கள். அவர்களை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உடனடியாக மாற்றும் வாய்ப்பு இல்லாவிட்டாலும் தென் மாவட்டங்களில் இருக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கு மாற்றி அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனை கருத்திற்கொள்ளப்படும்.

Travel concessions for blind

* 261 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to give concessional travel facilities in State buses in the city of Madras for the blind; and

(*b*) if so the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ)&(இ) குருடர்களும் உடலுறுப்பை இழந்தவர்களும் சென்னை மாநகரிலும் அதைச்சுற்றி 15 மைல் வரையிலும் தங்களுடைய குறைபாடுகளுக்குச் சிகிச்சை பெறும் காலத்தில் அரசுப் பேருந்துகளில் ஒரு நாளில் 2 முறை பயணம் செய்ய அவர்களுக்கு மாதாந்திர இலவசப் பயணச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன. மருத்துவச் சான்றிதழையும் மருத்துவ மனைச்சீட்டையும் காட்டுவதன் பேரில் இவை வழங்கப்படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : குருடர்களைக் கூட்டிக்கொண்டு வர ஒரு ஆள் தேவையிருக்கிறது. அவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. பெ. சீனிவாசன் : அந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில்தான் இந்தத் திட்டம் இருக்கிறது.